உ
கணபதிதுணை.
திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ-குமாரதேவசுவாமிகள்
அருளிச்செய்த

# மஹாராஜாதுறவுமூலம்.
# அத்துவிதவுண்மைமூலம்.
# பிரமாநுபூதிவிளக்கமூலம்.

இவை
சமிவனக்ஷேத்திரமென்னுங்
கோயிலூர்
ஸ்ரீ - முத்துராமலிங்கசுவாமிகளின்
ஆதீனத்திற்குரிய
ஸ்ரீ - சிதம்பரசுவாமிகள்
மாணாக்கர்களிலொருவராகிய
அ - இராமசாமிச்சுவாமிகளால்
பலருடையவேண்டுகோளின்படி
பலபிரதிரூபங்களைக்கொண்டு
பரிசோதித்து

சென்னை:
மிமோரியல்அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டன.

இரண்டாம்பதிப்பு.

நந்தனஹூ சித்திரைமீ.
இதன் விலை. அணா-௩.

உ

கணபதிதுணை.

## திருச்சிற்றம்பலம்.

# மஹாராஜா துறவுமூலம்.

### பாயிரம்.

அமரர்கள்பரவுந்திருமுதுகுன்றி லாழத்துப்பிள்ளையைச்
சிகரிக், குமரசற்குருவையிமகிரிராஜ குமாரியாம்பெரியநா
யகியை, மும்மலமுமொருங்கேயகற்றிடுமுக்கண்முதல்வனைச்
சாந்தநாயகனை, நமதெணப்படியே முடிந்திடத்தினமு நாடி
நின்றிறைஞ்சிவாழ்த்திடுவாம். (௧)

மறைமுடிவதனில்விளங்கிடுமொளியே மனிதரைப்போ
லவந்தெனது, சிறைதவிர்த்தாண்ட சிவப்பிரகாச தேசிகன்
றன்னைமற்றவன்றன், நறைமலரடியைப் போற்றிடுஞ்சாந்த
நாயகன்றன்னைமற்றவன்றன், நிறையருள்பெற்ற பழனிமா
முனியை நெஞ்சினுளிருத்தியேபணிவாம். (௨)

தொய்யின்முலைக்கோடிரண்டுகவான் றுதிக்கைமூன்று
விழிதிரிசிற், றுய்யசைவமுதன்மதமுந் துலங்கவருமொண்
பிடியுலக, முய்யவுதவுமொருகளிற்றை யுலவாவிருத்தசைல
த்தில், வையம்பரவுமாழத்து வாழைங்கரனை மனநினைவாம்.

### வேறு.

இருட்கலிவலியின் ஞானநன்னெறிக ளிறந்துயிர்கொடு
நெறிமேவி, மருட்கொடுகலங்கா வகைகலியென்றும் வந்த
னுகாப்பதிதன்னிற், றெருட்சத்திகருணை யுருவதாய்நின்று
தெளிவிக்குமிறைவியெங்குருவோர், அருட்கடல் பெரிய நா
யகி யுலகுக் கனை முதல்வியைப் பணிந்திடுவோம். (௪)

திங்களார்சடையிற் கங்கைநீர் அளிப்பத் திருந்திழைய
மையுளங்களிப்பப், பொங்கராவொடுநற் புலிமுனிவர்கண்
மால்போதயனமரர்கள்போற்றத், அங்கநான்மறைகடுதித்தி
டவைந்து தொழில்விரிந்திடப்பொதுவதனிற், செங்கழலதிர
நடஞ்செயும்பொருளைத்தினம்பணிந்திடரொழித்திடுவோம். ()

வேறு.

அருளுருவாயுயிர்கடமக்கன்னையாகி யஞ்ஞானந்தனை
யகற்றியமலமாகி, மருளிலதாய்மெஞ்ஞானமாகுமுத்தி வா
ய்த்திடவேசாத்தருளிவானேரேத்த, இருள்கெடவேமிளிரு
மிருங்கழல்களார்ப்ப விறைபுரியுந்திருநடத்தாற் களித்திடுவா
மூந், தெருண்மருவுமறைநான்கும் பரவுந்தில்லைச் சிவகாம
சுந்தரியைச்சிந்தைசெய்வாம். (௬)

வேறு.

செக்கர்போன்றொளிர்முக்கட்சிலம்பினை
மிக்கபேரருள்வேலையையோர்கொம்பாற்
றக்கவன்பர்க்குதவுந்தருவினை
இக்கதைநிறைவேறவிறைஞ்சுவாம். (௭)

வேறு.

கடிகமழ்கரியகூந்தற்கனிமொழித்திவர்வாய்த்தெய்வப்
பிடிதனக்கோட்டால்வள்ளிப்பெண்கொடிபடருஞ்செய்ய
படிபுகழ்புயமாங்குன்றிற்பாயவண்கழுநீர்நீப [ம்.
மடலவிழ்செழுந்தார்ச்செவ்வேண் மலரடிவணக்கஞ்செய்வா

வேறு.

வண்டுழாயலங்கன்மாயவன்மலர்மேல் வதிந்தநான்மு
கன்மறையறியாத், தொண்டைவாய்க்கெண்டை விழிக்கழை
மொழியொண் டொடியிடையுமையையோரிடத்திற், கொண்ட
கோனருளைப் பொருளெனக்கருதிக் குலவியசாதனந் தரித்

து, மண்டியவடியார் யாவர்மற்றவர்தாண் மனத்தினுஞ்சிர
த்தினும்வைப்பாம். (௯)

வேறு.

சகரர்தம்வலியையுந் தடந்திரைக்கடல்
லகலமும்பின்புளோரகழிலஞ்சிதான்
புகழுறவிளக்கலேபோலவிச்செயு
டகைதருகலைஞர் நூறணிவிளக்குமால். (௧0)

வேறு.

திங்களொண்கவிகைத் திகிரியந்திணிதோட்டிகழ்கடற்
ருணைமாராஜ, னங்கண்மாநிலத்திற்றுறந்தவீடடைந்தவரிய
விக்காதையைத்தமிழா, லிங்குமாதவத்தோரிசையுமென்றி
சைப்பவிசைத்தனன்வீடுறக்கேட்டோர், கொங்கவிழ்பொழி
ல்சூழ்பழமலையுறையுங்குமாரதேவென்னுமாமுனியே. (௧௧)

வேறு.

சிவன்றிருவுருவாமைந்துசின்மயவெழுத்தும்வாழி
நவந்தருநீறும்வாழிநயனநன்மணியும்வாழி
கவின்றருஸ்ரீகுமாரதேவன்கழலிணையிரண்டும்வாழி
யவன்றிருவடியார்தம்மோடாருயிரனைத்தும்வாழி. (௧௨)

பாயிரமுற்றிற்று.

---

## நூல்.

தருக்கிளர்நைமிசாரணியத்திற் றங்கியமுனிவர்கள்சூத
ன், வரப்பணிந்தேத்திக்கதைகள்பற்பலவா வகுத்துரைத்த
னைமஹாராஜன், றிருக்கதையெங்கட்குரைத்திலையதுநீசெப்
பெனச்சுருதியிற்சொல்லுஞ், சுருக்கமில்காதை யிதுவெனத்
தொகுத்துத் தோமறக்கேண்மினென்றுரைக்கும். (௧௩)

குழைத்ததண்சினைத்தேமாவினொண்கனித்தேன்குலவி யபலவினற்பலத்தேன், றழைத்திடுகதலிப் பழநுகுத்திடுதே ன்றுன்றிரண்டிலஞ்சியிற்றதும்பி, விழுத்தகுவயலிற்பாய்தர விளையுமிகுகருணாடதேசந்தா, னிழைத்தநற்றவத்தாலுயிரெ லாம்புரந்தங்கிருந்தரசாளுமோர்குரிசில். (௧௪)

வேறு.

மஞ்சமரிஞ்சிசூழ்மாபுரத்திருந்
தெஞ்சலிலெண்டிசையிறைவர்தாடொழத்
தஞ்சமென்றடைந்தவர்தம்மைக்காத்திகல்
வஞ்சகர்க்காய்மஹாராஜமன்னனே. (௧௫)

வேறு.

தருநிழலரசுவைகுஞ்சதமகன்றிருவின்மிக்கா
னுருவினின்மதனின்மிக்கானுலத்தினிற்பலத்ததோளான்
செருவினிலரியேறன்னான்றேனொடுஞிமிறும்பாட
முருகுடைந்தொழுகுந் தாரான்மூவுலகளிக்கும்வேலான். ()

வேறு.

அரசர்வந்திடுதிறையளக்குமுன்றிலான்
முரசுகளனுதினமுழங்குமன்றலான்
கரைபொருதிரை யெறிகடலந்தானையான்
அருவரைமார்பினன்யாளிமொய்ம்பினன். (௧௭)

அரசர்தம்முடியுழுதவிருந்தாளினன்
எரிதவழ்திகிரியையேந்துந்தோளினன்
மருவலர்வலியினைமாற்றும்வாளினன்
றருநிதிக்கொடையினன்றருக்குநாளினே. (௧௮)

வேறு.

கவரியோடாலவட்டங் காரிகையார்கள்வீசப்
பவளவாயரம்பையன்னார் பாகடையுதவமுத்தத்

தவளவாணகையார்கீதந் தனிநடஞ்செய்யநின்று
குவலயமன்னர்போற்றக் குஞாகடற்றுணேசூழ. (கக)

இந்திரனாலயம்போ லிலங்கியமண்டபத்தில்
சுந்தரமிருகராஜன் சுமந்தபூவணையின்மீது
வந்திருந்தவனிதன்னை மனுநெறிமுறையிற்காத்தே
யந்தமில்போகந்துய்த்தங் கிருந்திடுமரசர்கோமான். (உ0)

தூம்புடைப்பிறையெயிற்றுத் துத்தியீராயிரந்தோட்
பாம்பினுற்பரிக்கலுற்ற பாரினைப்பரிக்கப்பின்னர்
மேம்படுபுதல்வர்நந்தம் வீறுடைவயிற்றில்லென்று
தேம்படுதெரியன்மார்பன் சிந்தையாகுலங்களுற்றான். (உக)

கங்கையேமுதலாமிக்க கடவுண்மாநதியிற்றோய்ந்தும்
பங்கயாசனன்மாறிங்கட் பவளவார்சடையான்றன்னை
அங்கையாற்பூசைசெய்து மதிதிகட்களித்துந்தீயில்
பொங்குமாகுதிகளீந்தும்பூவலம்வந்துந்தேவர். (உஉ)

ஆலயஞ் சாலை யக்கிரார நந்தனவனங்கள்
கோலமாரிலஞ்சிகூபங் குளம்பலசெய்துமீரொட்
டேலுமாதானத்தோடே யிரணியமுதலீனாந்து
சாலநற்றுனமீந்துந் தருமமெண்ணான்குசெய்தும். (உங)

தவம்பலபுரிந்துவேந்தன் றனையனைப்பூத்தபின்னர்ப்
பவந்தனைத்துடைத்தேன்மேலாம் பரமநற்பதமுமுண்டென்
றுவந்துசாதககன்மத்தோ டொழிவறுகருமமெல்லாம்
நவந்தரச்செய்துநாம நன்மஹாராஜனென்றே. (உச)

வேறு.

வேதநீதியிற்கூறிவியன்றா
ஓதவெண்ணெண்கலையுமுணர்த்துவித்

தேதமற்றகுரவற்கிரணியம்
போதுமென்னப்பொழிந்தனன்கொண்டல்போல். (௨௫)

கொடிநெருங்குங்கொடிஞ்சியந்தேர்பரி
கடமலிந்தகயமொண்சிவிகையிப்
படியிலூரப்பயிற்றுவித்தாசிலா
வடிவிலங்குமகற்குமணஞ்செய்வான். (௨௬)

மடங்கலன்னபலமுள்ளமாமன்னன்
இடங்கொளெண்ணெழுதேசத்திறைவர்க்கும்
முடங்கல்போக்கினன்கண்டுமுடிமன்னர்
தடங்கொள்சேனைகள் சூழ்வரச்சார்ந்தனர். (௨௭)

வேறு.

வடிகொள்வெண்சுதையாற் பித்திகைதீற்றி வானுற மணிக்கொடிநிரைத்துக், கடிநறுஞ்சாந்தங்குங்குமந்தன்னாற் கமழ்தரமறுகெலாமெழுகிப், பொடிகொள் சிந்துரத்தாற் கோலமேபுனைந்துபூமலர்பொரிநனிசிதறிக், கொடிகொண்மூ தெயின்மேன்மாடமொண்சிகரிகோதறப்புதுக்கியேகுலவ.()

வேறு.

கதலியுங்கமுகுநட்டுக் காவணமலங்கரித்துப்
புதியதோரணங்கள்கட்டிப் பொற்குடஞ்செரித்துத்தீபம்
இதமுறவெங்கும்வைத்தே யிந்திரநகரம்போல
மதிமலர்த்தாமநாற்றி மாபுரியலங்கரித்தார். (௨௯)

வேறு.

வில்லிலங்குகைவேந்தர்மரபினில்
நல்லசாமுத்திரிகநூனன்கதாச்
சொல்லிலக்கணத்தோடுதரிசிலா
முல்லைமாலைமுருகுவிரியவே. (௩௰)

### வேறு.

மூவுலகதனிலுள்ள முகிழ்மூலைக்கருங்கட்செவ்வாய்ப்
பாவையரெழிலிற்போதன் பகுத்தெடுத்துயிரோடேய
ஓவியந்தீட்டிஞனென் றுலகினிலுரைக்கச்செய்ய
பூவுறைதிருவிரும்பும் பொற்புடனவதரித்தே. (௩௧)

### வேறு.

இலங்கியவாலொண் டளிர்குழைத்தினிய விருதனக்கோங்கிணையரும்பி, நலங்கிளராம்பல்குமிழிருகுவளை நண்ணுசெஞ்சரோருகம்பூத்துத், துலங்கியபுயலைச் சுமந்திருதாளாற் றேமிலாமின்னென நுடங்கிப், பலந்தரப்படருங்கொடியினைவேதப் பண்பினின்மன்றல்செய்வித்தே. (௩௨)

### வேறு.

அருந்ததிகணவன்முதன்முனிவரர்க ளருமறைக்கிழவர் கடம்மால், பொருந்தியகங்கைப்பூம்புனலாட்டிப் பொன்னவமணிகளாற்றுயின்ற, விரிந்திடுமடங்கன் மென்றவிசேற்றி மிளிர்நவமணிமுடிகவித்துப், பருந்தடர்வேலாள் பௌவமார் புவியைப் பரியெனத்தோன்றல்பாலளித்தான். (௩௩)

சோகமேயின்றியிருந்தனன்வேந்தன் றேன்றலும்பார் பொதுநீக்கி, ஏகமாய்ச்செங்கோ லெங்கணுஞ்செல்ல வெண்டிசைவிசயமுஞ்செய்தே, மாகநாடென்னப்போகமேதுய்த்து மடந்தையோடிருந்தனனென்றுன், வாகைவேலவன்பினென் செய்தானென்ன மறையவர்க்குயர்முனிவருக்கும். (௩௪)

மனைவியுந்தானுமோர்மினைவாகி மாறுபாடின்றியோர்காலும், தனையுணர்யோகிதந்தைதாய்கடவு டங்களையனுதினமிறைஞ்சி, அனையவருரைத்த நெறிதனினடந்து மருத்தங்கண்மனதினிற்றரித்தும், வினையமதுடனே நூன்முறையவரைவினவியுஞ்சிலபகல்போக்கி. (௩௫)

தனியிடமதனி லிருந்திருவர்களுந் தங்களிற்றுமுணர்ந்
திசாவித், தினிசெய்மாமாயைப் பிறப்பதுநீங்கிச் சுகமதை
யடைந்தனுதினமும், இனிமையதாகவிருக்கலாஞானத் தெ
ன்றெணி ஞானிகட்சார்ந்தி, நனியவர்பாதபூசனைபுரிந்து நா
டொறும்வினவினர்நன்றாய். (௩௬)

இருவரிலரசன்றனக்கறிவோங்க விருவகைச்சார்வையு
மகற்றிக், கருவுடற்காவறனையுங்கைவிடுத்துக் கருத்தசையா
திமெய்யுணர்வை, மருவிடிலகப்பற்றற்றுமேல்வீடுவாய்த்திடு
மதற்குமெஞ்ஞானக், குருவருளின்றி விளங்கிடாதெனவே
கொண்டனன்மனத்தினிற்றுணிவே. (௩௭)

மனைதனிலாசைபொருந்தியேநின்று மகிமையின்ஞானி
யாமெனவே, தனைமிகமதிப்போன்றன்னைவந்தொருவன் றந்
திடுஞானமென்றிரந்தி, வினவன்மட்டையினைப் பருகுவோன்
றன்னை வேண்டித்தென்னம்பழந்தனையே, இனம்பணித்திரி
வோன் புத்திபோன்மெனவே யியம்புவர் முற்றுணர் பெரி
யோர். (௩௮)

வேதவாகமசாத்திரபுராணங்கள் விளங்கவேகற்றுணர்
ந்தவற்றைத், தீதறவெவர்க்குந்தெளிவுறவோதிச் செப்பிய
வந்நெறியதனிற், சாதகமிலாதகுருவினையொருவன் றுனடை
ந்தானந்தம்வினவல், ஏதமாங்கழுதை தன்னைக்குங்குமத்தி
னியல்புகேட்டிடுதல்போன்மென்றே. (௩௯)

சீவர்களிடத்திலருள்சிவபத்தி திருந்தியதுறவுமெய்ஞ்
ஞானம், ஆவதோர்வடிவாம்வேதமாமுனியை யமலவாரணி
யத்திலடைந்தே, தேவர்கடேவேதின்பமோர்காலுஞ் சென்
றிடாமுத்திதானெய்திச், சாவதும்பிறப்புநீங்குமோர் நெறி
யைச்சாற்றெனத்தாழ்ந்திடமுனிவன். (௪௰)

இருவகைச்சார்வாம்புறப்பற்றைநீக்கி யிச்சையின்மீட்
டதினினைவு, மொருவியேயுடற்காவலையுங்கைவிடுத்தே யுட்
கரணங்கள்வாதனையும், குருவருணெறியே யொடுக்கிடில்வீடு
ங் கூடுந்தானாகவேபவத்தின், கருவழிந்திடுமிந் நெறியைநீ
விரைவிற் கைக்கொண்டுசெல்லெனவுரைத்தான். (சக)

அந்நெறிகுருவாலையமுந்திரிவு மகன்றிடத்துணிவதாக்
கேட்டு, முன்னெறியான வரசியற்கையினின் முயன்றனன்
சிறிதுநாளொருநாட், பின்னெறியதனை நினைந்தனைவரையும்
பெயர்ந்திடவிடைகொடுத்தரசன், மன்னெறிக்கோல மகன்
றந்தப்புரத்தில் வதிந்தனனொருவனாய்த்தனித்தே. (சஉ)

அரசர்களமைச்சர்புரோகிதர்பெரியோ ரனைவருமவ்வி
டத்தேகி, அரசனைநோக்கிநித்தியகரும மகன்றுவாளாவிரு
ந்திடுதல், அரசிலக்கணமன் றெனவவர்வேண்ட வவர்களை
நோக்கியேவேந்தன், அரசியற்கையினை வேண்டலனென்னை
யறியவேவேண்டினனன்றே. (சங)

ஆண்டதோரரசுதனிலும்போகத்து மாசையற்றேனினி
வேண்டேன், மாண்டதோர்வனத்தி லொருவனாய்த்தனித்
தே மனத்தசைவறுத்துவீடடைவேன், பூண்டவென்மனமிங்
கினித்திரும்பாது போகத்தைப் பொருளெனவெண்ணி, வே
ண்டலனீங்க ளரசனாவேறே விதித்துக்கொளுங்களென் று
ரைத்தான். (சச)

ஆதியினினதுதாதையுநினையே யரசினிளமையிற்சூட்
டத், தீதின்றியுனதுபுயவலிமையினிற் செகமதைத்தாங்கினை
யினிமேல், நீதியினாநியமதியினாதரவினின்னைப்போலொருவர்
மற்றுளரோ, ஈதியற்கையதன் றிவ்வுடலுடனே யிச்செல்வ
மன்றிவேறுளதோ. (சரு)

அலதுநீயேகினவனியுங்காப்பற் றவத்திலேயலைந்திடும் யாமும், சலனமதறுவேமித்தகையெமைநீ தவிக்கவிட்டே குதல்கடனன், றிலகிடவெமக்கீதருளெனவமைச்ச ரியம்பிட வரசனும்பார்த்தே, உலகமெய்யனவென் னுறுமதியுடையோர்க் குரைப்பினுமுணர்வுதியாதால். (௬௬)

இவ்வரசியற்கையற்பமற்றிதனா லெய்திடுந்துன்பினுக் களவின், றவ்வகையதனை யூகமின்மையினா லறிகிலர்நீங்களின்பென்றே, எவ்வகைவினைந்தீரினியெக்காலுங்கட்கீதின்பமலதெனத்தோன்றும், ஒவ்வமற்றிதனுக் கூகமேதோன்றுதிங்களுக்குலகயூகுதிக்கும். (௬௭)

என்றுமற்றனேக மாவிரித்தரச னெடுத்தமைச்சர்கடமக்கியம்பி, நின்றுபின்னவரை நிலுமெனநிறுத்தி நிதிதனும்பொன்மனைவிடுத்தே, சென்றுபின்னகர வீதியினடக்கத் திரண்டனைவர்களும் பின்றொடர்ந்து, வன்றுயரடைந்து வாடியேமெலிந்து வாரியினோசையினழுதார். (௬௮)

அவரவர்வினையி னவரவர்வருவா ரவரவர்வினையளவுக்கே, அவரவர்போக மென்றதேயாயி னாருக்கார் துணையதாகுவர்கள், அவரவர்தேக முளபொழுதுடனே யாதரவாெனநாடி, அவரவரடைத னெறிகன்மத்தடையு மாதரவாதரவாமோ. (௬௯)

வினையுளவளவுங் கூடியேநிற்கும் வினையகன்றிடிற்பிரிந்திடுமால், வினையினால்வருமா தரவினினியற்கை மெய்யுணர்வத்தகையலவே, வினையிலையுங்களிடத்தினானிருக்க மெய்யுணர்வொன்றையேநாடி, வினையறுகானம் புகுதவேவேண்டி விரும்பினேனீர்நிலுமிங்ஙன். (௫௦)

என்றுநல் வேந்தனேதிலார்போலவேகினன னவருங் கண்ணீர், நின்றெதிர்சொரிய வாய்விட்டே யலறிநின்றனர் தமர்கள்பின்னேகி, இன்றெமையாவர்காத்தளித்திடுவரினி யைநீயேகுதனீதி, அன்றெனவுரைத்தாரவர்களை நோக்கியர சனிதுரைத்தனனன்றே. (ருக)

வேறு.

உறவாகுமெனவெணுநீர் தொடர்பதியல்பன்றுகு முயி ர்கட்கெல்லாம், உறவாகுஞானநனிபகையாகு மஞ்ஞான முய்த்து நோக்கின், உறவானவதையடைந்து பகையான விதைநீங்கியொருமையாக, உறவாதறனக்குத்தானேயென மற்றுறவுவிடுத்துறையுமென்றான். (ருஉ)

தந்தைதாயிருவருந்தம்புதல்வனெனும் வாஞ்சையினூற் றன்பின்னேகி, மைந்தவா வெங்களிருவரையுமெவர்காப்ப தற்கு வைத்தாய்நீதான், சிந்தைதானுனக்கெங்கே மகனே யுன்றிருமுகத்தைத் திரும்பிக்காட்டாய், நொந்துதான்பெற் றவயிறெரிகின்றதெனவுரைக்க நோக்கிமன்னன். (ருங)

அறிவைநோக்கிடிலதற்குத்தாய் தந்தையிலையிவ்வுடல தனைநோக்கில், இறையுநீருபாதானகாரணமன் றிருமாயை யினிலுண்டாகும், குறியிதுவிங்காயின் மண்ணிலெனைப்பெரு தவரிலையக் கொள்கைநீரு, நிறையுமதியிலரோநீர் நில்லுமெ னவிருவரையுநீத்துப்போனன். (ருச)

அரிவையர்கடமக்கிலக்கணங்கூறு நூலதனிலதனையெ ல்லாம், உரிமையதாவுடையவளாமினியமனைதொடர்ந்தேகி யுருகிநின்று, பரிவினுடனடிகள்பணிந்தரற்றியே பதைபதை த்துப்பனிகண்பாயத், தரியெனுமைவிடுத்துலக மதனிலொரு கணமேனுஞ்சாவேனென்றாள். (ருரு)

நின்னுடையநாயகனைநினைதுள்ளேயுறநோக்கி நிற்கமா
ட்டா, தன்னுடையநாயகனென்றென்றனையேகருதிநீயுழல்
வதென்னே, மின்னனையவிடையாய்கேளனைவருக்கு நாயக
ஞேர்மேலாமீசன், அன்னவனையே தேடிப்போகின்றேனெ
னவரசற்கரிவைசாற்றும். (ருசு)

ஞானமானதுபொதுவே நூலதனிற்றுறவதற்குநவில்வ
தில்லாள், ஆனமாதினையலவோவிடுகவெனவறையும்பதியா
னவுன்னை, ஈனமாவிடுகவென வறையுமதோ துறவறமிங்கெ
னக்கென்சொல்லும், ஆனதாலுமையொழிந்து கதியிலையே
யெனவெணியானடுத்தேனென்றாள். (ருஎ)

ஆகமத்தின் விதிதவறுதறைந்தனை நீவிவேகியேயாவா
யானும், தேகமுதற்பிரபஞ்சமதனினைசைவிடுத்துவனஞ்செல்
லாநின்றேன், நாகமுலையாயெனுமாதடுத்தலுன்றன் விரத
மலநாடுதன்னில், போகுதியென்றவனை விடுத்தேதிலைாப்
போலகன்றுபோகாநின்றான். (ருஅ)

விரிவாயஞானமதை யுணர்ந்தாலு மடந்தைபதிவிலங்க
நிற்றல், அரிதாயதகைமையினு லேங்கியே பதைபதைத்து
மவனைநோக்கித், தரியாதுகதறியேவினைதனையே நொந்து
தான்றளர்ந்துநின்று, தெரியாதுமறைந்தவிடந்தனின் மிகவு
முருகியேதேம்பிவீழ்ந்து. (ருகூ)

வேந்தனேயுனைவிடுத்து முலகமதிலிருக்கவோவிதித்தா
னீசன், தீர்ந்ததோவுமக்கெனக்கும் வினைதானுமின்றளவிற்
சேர்ந்துநிற்கும், போந்தவுமை யெக்காலங்காண்பேனுனினி
யெனவேபுலம்பிமாதும் சார்ந்தனள் பின்றிரும்பியேநகரத
னின்மாதிலன்றன்சார்புதன்னில். (சூ0)

அரசனந்தநகர்விடுத்துத் தேசநாடுகளு மகன்றடவிசென்றே, இரவுபகலகநிலையே நிலையாகவிருந்தவர்க ளிடமே சேர்ந்து, பரகுருவினுபதேசத்தரியபொருள் வினவியவர்பக ரக்கேட்டுத், திரமனமாயொருவராற்கலங்காதஞானியாய்த் தீரனுகி. (சுக)

## வேறு.

நகர்தனிலேகிப்பிச்சைநண்ணியேமனைகடோறும்
அகமகிழ்ந்தங்கையேற்றேயவ்விடத்தருந்தியாங்கே
செகமுளோர்பேயென்றெண்ணிச்சிரித்திடநாணமின்றி
இகபரத்திச்சையற்றேயேகனுயுலாவலுற்றுன். (சுஉ)

பொருந்திவாழிடமொன்றுகிற் பொருந்திடும் பற்றென்றெண்ணி
இருந்திலனேரிடத்துமெங்கெங்குமொருவனுகித்
திருந்தியசமாதிவிட்டுத்திரும்பிடாதுறைக்கவுன்னி
இருந்திருந்திடங்களெங்குமேகமேநோக்கிநின்றுன். (சுங)

தோன்றிடுமுலகமெங்கே தோன்றிடுமென்னநோக்கித், தோன்றிடுநினைவிலென்றே தோன்றியநினைவுதானும், தோன்றிடுமிடத்தைப்பார்த்துத்தோன்றிடுஞ் சொரூபத்தென்றே, தோன்றிடும் பொருள்களெல்லாஞ்சொரூபமே யென்றுகண்டான். (சுச)

தோன்றிடும்பொருள்களுண்டாய்த் தோன்றியேயின்பமாகித், தோன்றிடுமதனுலந்தச் சொரூபமேயென்றுகண்டு, தோன்றிடுஞ்சொரூபந்தன்னிற் றேன்றுமீதசத்தேயென்று, தோன்றிடுஞ்சொரூபந்தானுய்த் துளக்கமற்றிருந்தான் வேந்தன். (சுரு)

கடிநகர்தோறுஞ்சென்றுங்கானகந்தோறுஞ்சென்றும்
படிவலமாகவந்தும்பார்வைமாறுட்டமின்றி

மடிவிலாமனத்தனுகிமாசிலாநிலைமைபெற்று
முடியுடைவேந்தர்வேந்தன்முத்தியேவடிவமானான். (சுசு)

முத்தியேவடிவமானமுடியுடைவேந்தர்வேந்தன்
எத்திசைதனக்கும்ராஜனெமைவிடவேறில்லென்று
சத்தியமாகவெண்ணித்தன்னிடமதனிற்றன்னைச்
சுத்திசெய்தனைத்துமாகிச்சுயஞ்சோதியாகிநின்றான். (சுஎ)

தன்னையேயன்றியொன்றுந்தானுதியாவிடத்தின்
மின்னையேயொத்தவையமித்தைகற்பிதமதென்றும்
பொன்னையேயன்றிவேறுபூடணமிலதுபோல
என்னையேயன்றியொன்றுமில்லெனத்தேர்ந்தான்வேந்தன்.

உலகினைவேறதாகவுணர்ந்திடிற்பந்தமாகும்
உலகினைத்தானேயாகவுணர்ந்திடின்முத்தியாகும்
இலகிடத்தோன்றலெல்லாமென்னினைவேயென்றெண்ணி
இலகிடக்கண்டுவேறற்றிருந்தனனிளமைவேந்தன். (சுகூ)

ஏகசக்கரமதாகவிருந்தரசாள்வோன்செல்வப்
போகமுந்திரணமாமப்போதநாட்டரசியற்கை
யூகபுந்தியினாலாசானுபதேசத்தாளவந்தச்
சோகமற்றிடுநாடெய்தித்தொழிலெலாமுடித்தான்மன்னன்.

பந்தம்வீடென்றுமில்லைப்பரம்பொருளொன்றேயென்றும்
தந்தஞ்சங்கற்பத்தாலேசாலமோகிப்பர்தீயோர்
அந்தமாதிகளுமில்லாவரும்பொருணாமேயென்று
சந்ததநோக்கிபந்தத்தற்பரந்தானேயானான். (எக)

குறைவிலாநிறைவதாகிக்குளிர்ந்திளைப்பாறிவேந்தன்
இறையளவேனுந்துன்பமின்றியேயின்பமாகி

உறைவிடமின்னதென்ன வோரிடமின்றியெங்கும்
நிறைவதேயிடமாய்நின்றா னிகரின்மாராஜன்றானே. (எஉ)

எங்குமாய்நிறைந்துநின்ற வேகராச்சியமதாள்வோன்
தங்குதலின்றியெங்குந் தானெனக்கண்டதூயோன்
இங்குறைந்தகன்றபாண்டத் தியல்பினெஞ்சருவம்பற்றி
அங்குருவகற்றிநின்றா னானந்தியாகிவேந்தன். (எங)

சீவன்முத்தர்கள்பானிற்குஞ் செப்பியமனத்தரூபம்
மேவரும்பரமமுத்தி மேவிடினாசமாகும்
தாவருநிலைமைநன்றாய்ச் சற்குருவருளாற்பெற்றுக்
கேவலமாகிநின்றான் கேடிலாஞானவேந்தன். (எச)

இத்தகைஞானம்பெற்றே யெழின்முனியாகியெங்கும்
சித்தனாய்த்திரிதறன்னைச் செப்புமுன்னமைச்சர்தம்முள்
வித்தகனொருவன்கேட்டு வினவிடவேண்டுமென்றே
கத்தனாமரசைத்தேடிக் கண்டடிபணிந்துநின்றான். (எரு)

பூவணையாகிவானம் பொருந்துமேற்கட்டியாகித்
தீவமதாகியிந்து செங்கதிர்வீசுங்காற்று
மேவுசாமரமதாகி விடுதலைமனைவியாகிக்
கேவலமின்பமாகிக் கிளர்ச்சியாய்நின்றான்வேந்தன். (எசு)

ரதமுதற்சேனைசூழ ரத்நசிங்காசனத்தில்
விதவலங்காரத்தோடு வீற்றிருந்தமரும்வேந்தன்
உதவுகோவணனாய்மேனி யுருத்தெரியாதநீறாய்
முதன்முடிவிரித்துநின்றான் முனிவனாயொருவனாகி. (எஎ)

கரிரதமிவர்தலின்றிக் கானடையாகியெங்கும்
உரியதோர்மனைபூணின்றி யூரெங்குமுண்பானாகி

அரியராசாங்கக்கோல மகற்றியேதவாங்கமாகித்
திரியுமவ்வரசைநோக்கிச் செப்பினனமைச்சன்றானே. (௭௮)

அவனியினினக்குமேலோ ரரசனுமில்லையிந்தத்
தவவடிவாகியெங்குஞ் சரித்திடலெற்றினுக்கோ
நவமதாயுடலிதோடே நண்ணுவதெனையீதன்றி
இவணெனக்கருளவேண்டு மெனக்கறிவோங்குமாதே.(௭௯)

பதத்தினைவேண்டின்முன்னம் பற்றிநின்றில்லறத்தைப்
பதப்படநிறுத்தியேகல் பண்பதாமேலாமுத்திப்
பதத்தைவேண்டிடிலோஞானப் பார்வையிற்கூடுநீயெப்
பதத்தினைவேண்டியிந்தப் பரதேசியானதென்றான். (௮௦)

அமைவுடையமச்சின்மிக்கோயடைவுடன்வினவிக்கேட்டாய்
இமையளவேனுஞ்சித்த மிதுவதுவெனவோடாது
சமைவுடன்கேணீசொன்ன சங்கைக்குத்தரங்கணன்றாய்
நமைவிடவேறோர்வேந்து நாட்டிலையென்பதொக்கும். (௮௧)

பதமதைவேண்டினில்லைப் பதப்படநிறுத்தியேகல்
இதமென்றலொக்குமுத்தி யெய்துதன்ஞானப்பார்வை
விதமதிற்றோன்றுமென்றாய் விருப்பமாய்க்குடும்பபாரத்
திதமதாயழுந்துவோருக் கெங்கனம்பார்வைதோன்றும். ()

மனமிருபொருளைப்பற்ற மாட்டாதட்டாவதான
இனமவைபுறநோக்கான வேதினாற்கூடும்வீடு
கனவுண்ணோக்காகுமில்லங் கருதியபுறநோக்காகும்
அனகவிவ்வுகந்தோன்ற வறைகுவனாமேகேளாய். (௮௩)

வேறு.

தென்றிசைநடப்போர்கங்கைசென்றுதோய்ந்திடுவரோதான்
அன்றியுமவனிவாழ்க்கைக் கமைச்சர்களுடனேகாந்தம்

ஒன்றியேயூகஞ்செய்வோருலகவேந்தாயினோர்கள்
நின்றிதைநோக்காயில்லி னிற்பவர்முத்திசேரார். (௮௪)

பாசந்தான்பகையதாகப்பார்வைபெற்றிடிற்பாசத்தில்
பாசந்தான்வைத்துப்பின்னும்பற்றவுங்கூடுமோதான்
பாசந்தான்பகையதென்றேபகருநான்மட்டேகற்றோர்
பாசந்தான்விடவுமாட்டார்பரமெலாமெனவாய்ப்போக்கும்.

அந்தமாதியுமிலாவீடடைந்திடற்பிறப்பறுக்கச்
சுந்தரஞானம்போதிந்துறவறமேதுக்கென்றே
மந்ததிகாரியோரைமதித்துநூலுரைக்குஞ்செய்தி
அந்தமதானபேருக்கத்தகைவிளம்பாதென்றும். (௮௫)

## வேறு.

தோன்றுகின்றபொருளியல்புந் தோற்றுவிக்கும் பொருளியல்பும், தோன்றவுனக்கியாமுரைக்கச் சோகமறவேகேட்டிடுவாய், தோன்றுபொருள்க ளநித்தமுமாய்த் தூய்மையின்றித்துக்கமுமாய்த், தோன்றுந்தோற்றுவிக்கும்பொருள் சுகமாய்ச் சுத்தநித்தமுமாம். (௮௭)

## வேறு.

பாலனானபருவம்போம் பன்னுகுமாரப்பருவம்போம்
கோலமானதருணம்போங்கோலையூன்றிக்குனிந்தெழுந்து
காலன்மாய்க்கவனைவர்களுங்கல்லென்றழுதுபேர்மாற்றி
ஏலப்பிணமென்றொருபெயரிட்டிடுகொட்டிடுதலொருதலையே.

கருவினின்றுமழிந்துபோங்கண்டகுழந்தையினுங்குமரப்
பருவந்தனிலும்போந்தருணப்பருவந்தனிலுமழிந்துபோம்
வுருவநடுங்குமூப்பதினுமொடுங்குமெந்தக்காலையினும்
ஒருவியழிதலியல்பாகுமுலகத்திடலின்வாழ்க்கையுமே. ()

பஞ்சபூதமழிந்துபோம்பானுத்திங்களுடுக்கள்போம்
வஞ்சவசுரர்மடிந்திடுவர்மாகர்பதம்போம்வல்லரக்கர்
துஞ்சுவார்கள்போகிபதந்துஞ்சும்பிரமன்பதந்தானும்
துஞ்சுந்திருமால்பதந்துஞ்சுந்துஞ்சாதொன்றேபரமபதம். ()

தோலிரத்தமெலும்பிறைச்சிசுக்கிலமேதைமச்சையொன்றாய்த், தூலிகரித்தவுடம்பாகுந் தொட்டவெவையுந்தன்வடிவாய்க், கோலியடக்கிக்கொளுமிதனைக் கூறுகூறாநோக்காது, போலியுணர்வோர்மகிழ்வெய்தும் புனிதமென்றும் பரமபதம். (௧௧)

அரந்தையதனையொழுங்காகவறையக்கேணியவனியெல்லாம், பரந்தசிருட்டிதிதியொடுக்கம் பண்பாய்நிகழுஞ்சிருட்டிதனில், பொருந்துபெரியதுன்பைந்து போய்மாண்டுறிலதெண்மடங்கே, இருந்ததிதியுமிரண்டாகு மிளமையென்றுமூப்பென்றும். (௧௨)

விருத்தபருவமிகத்துன்பம் விளங்குமிளமையிரண்டவையின், வருத்துபிணியின்மிகத்துன்பம் வளமையிளமைமூன்றாகும், கருத்ததறியாக்குழந்தையென்றுங்குமாரமென்றுங்காளையென்றும், அருத்தமறியாததிற்றுன்ப மடையும்பாலப்பருவத்தில். (௧௩)

தந்தைதாயராசிரியர் தாங்கண்முனிதறனக்கஞ்சிச்
சிந்தைகலங்குங்கவுமாரஞ் சிறந்தகாளைப்பருவத்தின்
முந்துபசிநோய்காமநோய் முடுகித்தணிக்கப்பொருடேட
இந்தப்புவனத்திரவுபகலிடையராததொழிற்றுன்பம். (௧௪)

பொருளுண்டாகிற்காப்பதனாற் பொருந்துந்துன்பமரசாகின், ஒருதம்மிகுத்தவரசரா லுதவுந்துன்பமொருகுடைக்கீழ், நிருபனாகினோய்மரண நேருமென்னும்பயத்தானும்,

வருவதென்னையோ மறுமையினி லென்றும் வாடித் துன்புறு
மே. (௯௫)

மாகர்க்கசுரர்பகையுளது மகிழ்ச்சிவாட்டமிகவுமுள
தாகத்தகலாநோயுமுள தனங்கனுளதுநசையுளது
போகத்தழுந்தன்மிகவுளது பொன்றலுளதுகற்பத்தே
சோகத்திறங்களிவையுடைய துறக்கத்தென்னசுகமுளதே.

தேவர்மனிதர்துன்பத்தின் றிறங்களிவ்வாறுகியிடில்
ஆவகீழாமிருகமுத லசரமீறுமைவகையில்
ஓவலில்லாத்துன்புக்கோ ருவமையில்லைநிரயத்தில்
நோவதுன்பஞ்சொல்வதென்ன நோயேபவத்திற்சுகம்வீடே.()

வேறு.

இந்தவிழிவையுடைய விந்தமாயையசத்தே
அந்தவுயர்வையுடைய வந்தப்பிரமஞ்சத்தே
தந்தமனதிற்றேர்ந்தோர் தள்ளியெஃதைநிற்பர்
உந்தன்மனதினன்று யூகித்தமைச்சபாராய். (௯௮)

பொய்யென்றிதனையறிந்தோர் பொருந்திநிற்பதுளதோ
மெய்யென்றதனையறிந்தோர் மேவாதிருப்பதுளதோ
ஐயமுளதோவிதனி லமைச்சபாராய்நன்று
உய்யவறிவிலாதோ ருழல்வர்நீக்கமாட்டார். (௯௯)

பொய்யைமெய்யென்றறிந்து போதமின்மையாலே
மெய்யைப்பொய்யென்றெண்ணி மெலிந்தேயுழல்வருலகர்
பொய்யைப்பொய்யென்றறிந்து போதகுருவினருளின்
மெய்யைமெய்யென்றறிந்தேமெலிவுதீர்வருயர்ந்தோர்.(௧00)

துன்பந்தோன்றிலெவருந் துறந்தேகராய்த்தனித்தே
இன்பந்தேடவியற்கை யின்பமென்றேதோன்றில்

அன்பதாகநீங்கா ரவர்கட்கெங்கன்கூடும்
நன்பரமஞான நாட்டமமைச்சசொல்லாய். (௧0௧)

இழிவையுணர்ந்தா லுயர்வை யெவருந்தேடிநோக்கும்
இழிவையுணராருயர்வை யெய்தநோக்காரொன்றும்
இழிவையிழிவென்றுணர வெந்தக்காலம்வாய்க்கும்
இழிவையுடையோர்க்கமைச்ச விதனையூகித்துணராய்.(௧0௨)

பேதவாதிகளைப்போற் பிரபஞ்சம்வேறெனவே
ஈதகன்றதலவே யெமையன்றியதில்லென்றே
போதவிழியிற்றுறந்த புனிதத்துறவேகண்டாய்
சீதமதிபோற்குளிர்ந்து செனனவெப்பந்தீரும். (௧0௩)

இருந்தவிடத்திலிருந்தே யெய்தலாமென்றுரைக்கில்
திருந்துநிமலமனத்தோர் தீரரொனினுமொழிந்தே
பொருந்தியேகாந்தத்திற் போதமடக்கவேண்டும்
வருந்துமனத்தோர்க்கென்னை வாய்க்குமமைச்சசொல்லாய்

முனமேயனைத்துமுடித்து முழுதுமுணர்ந்தோரில்லின்
இனமேசென்றுநின்று மேகநீங்காரொன்னில்
தினமேயகமாய்நிற்போர் செகத்தினியல்பையுணரார்
கனமாம்யாழ்ப்பாணத்தின் கப்பலோட்டம்போல. (௧0௫)

ஒருத்தனோருருளனையொரு வேந்தாக்கின்முன்னம்
இருக்குமிடத்தைநீக்கி யேகராசதானி
இருக்குமன்றிமுன்க ணிருக்குமோதான்சொல்லாய்
இருக்குஞானமுடையோர் செகத்தைமெய்யென்றுழலார். ()

மனையினின்றுலும்பொருளுயிர்ச் * சார்வின்வருத்தனங்கெ
டுதலின்மகிழ்ச்சி, இனிமையில்வாட்டம் † விடையவின்பதனி

---

* சார்பின்-என்றும் பாடம். † விடய-என்றும் பாடம்.

லெட்டுணையாயினுமாசை, பினையதிற்றமதுபிரவிர்த்திதானும் பேசுமிந்நான்குமில்லெனினும், தனையுணர்வதற்குச் சாதகஞ்செயுங்காற்றள்ளியின்னிற்றலேதகுதி. (௧௦௭)

தீதுறுமனையின்பினையிகழ்ந்தந்தச் செம்பொருளின்பமே வேண்டிச், சாதகமதனிற்றொடங்குகால்விடையந்தடையதாஞ்சாத்தியமான, போதினிலவையுந்தோன்றிடாதந்தப் பொருவிலானந்தமேலிடவே, ஆதலிற்றுறவின்ஞானமஞ்ஞானமாகுமென்றறைகுவர்பெரியோர். (௧௦௮)

இல்லறமதனிலுறைந்துளோரிடத்தி லிருப்பினுஞானங் கீழிரும்பில், புல்லியமாரத்தினமெனவிளங்கும் போக்கியில்லினைத்துறவென்னும், நல்லறமடைந்தோ ரிடத்துறைஞானநற்றங்கமிசையிரத்தினம்போல், எல்லையிலொளியாய் விளங்கிடுமாயி னில்சிறப்பன்றுஞானிகட்கே. (௧௦௯)

முனமனைவர்களுமுறைவதுமில்லமுத்தியையுணர்ந்தறிஞர்களும்,பினமதினின்றபடியினுற்சங்கைபேசுவர் * அறவுடையோனா, இனமதைவிடுத்தில்லறமதுவெய் தலையெனவியம்புவதுண்டோ, மனமதினிதனையூகிநீயமைச்ச மகிமையன்றில்லஞானிகட்கே. (௧௧௦)

ஆடியசகலமடங்குகேவலமு மகற்றியே யொளிப்படைகொண்டு, மூடியவிருளைமுழுதையும்வீசி முடிவில்வீடதனையேயுணர்ந்தோர், நீடியஞாலமிசையினிற்பால னிசமருளுடையன்பேய்ப்பிடித்தோன், கூடியகுணத்தினூரிற்போய்க்குடியின்கூலியாளினி னியல்படைவார். (௧௧௧)

வினைகளோரிரண்டுஞ்சமமதாய்ஞான மேலிடுகாலையினிந்த, மனையின்பங்கான்றசோற்றிற்கண்டுவெர்த்து மாற்றியே

* அறவுடையோனை-என்றும் பாடம்.

கைவிடவருமேல், தனையுளபடியேயநுபவமதனிற்றானுணர்ந்
தானந்தமடைந்தோர், பினையுமவ்விடயம்பூண்பர்களெனவே
பேசுதல்வழங்குமோசொல்லாய். (௧௧௨)

விடையவின்பதனி னசையுளோர்தமக்கும் விரிவதாம்
பேரின்பச்சுவையின், அடைவினைச்செவியிற் கேட்டவக்கண
மேயவற்றினையகற்றிடவருமேல், இடைமுதலீறின்ஞானவா
னந்தமெய்தினோர்களும்பினுமிந்தக், கடைமனைவாழ்வை நி
னைவர்களென்றுற் கண்டனர்நகையரோசொல்லாய். (௧௧௩)

பற்றிலையாயினவையினிலிருப்பேன் பழையவூழ்வினையெ
னிலாசை, சற்றெனுமுதிப்பித்தல்லவோவூட்டுஞ் சகவின்பிலி
றையெனுமிச்சை,முற்றுணர்ஞானத்தோர்கள்பூண்பர்களோ
முடிவிலானந்தமேபருகி, நிற்றலேமீட்டும் விழிப்பினுங்கான
னீரிற்கண்டுண்முகமடைவார். (௧௧௪)

பவமதையினிமை யெனவெணிவிடையம் பற்றிநின்றுழ
ன்றவர்தாமே, பவமதையினிமையலவெணிவிடையம் பற்ற
றுத்தருட்குருவுடைந்து, பவமதையறுக்குநெறியுணர்ந்தரு
ளிற் பரவின்பமடைந்தவர்தாமும், பவமதையினிமை யென
வெணினலவோ பற்றுவர்விடையவின்புளாயாய். (௧௧௫)

கொடிமுதல்வாடும்வேர்முழுதினையுங் கோதறக்களைந்
திடிற்களைந்திம், படிமிசைகொடிபூகாய்பழமோங்கல் பகரதி
சயமஃதினைப்போல், அடிநடுவீறில்பிரமந்தானாகி யகப்பற்
றையறுத்தவரிடத்தும், மடிவுறுமனையில்விரும்பியேநெஞ்சம்
வருத்தனமாதலென்றறைவார். (௧௧௬)

ஆணவமதனைத்தோய்ந்துடலினைநாளுமெனத்தினவெறி
வலைவயைப், பேணலைச்சுகமென்றுண்மகிழ்ந்திடுவோன் பேரி

ன்பத்தாசையதாகிப், பூணவஞ்ஞானமிலையதின்ஞானம்பொருந்தியச்சொரூபந்தானாகி, ஏணவானந்தத்தழுந்து வோன்விடையமெய்திடின்ஞானமேயிலையால். (௧௧௭)

வேறு.

கனவதனிலுணர்விலதுகாணுந்தனுவாதிகளைக்கருதியேநின், றனுமவரினிதுகளவென்றுணர்ந்தவர்கணசையிலதினுலகுதன்னில், தனதசயவுருவதனை யநுபவத்திற்றானுணர்ந்திச்சகமதெல்லாம், மனமதனிற்சாலமெனவுணர்ந்தவரிவ்வுலகின்பின்மையனீங்கும். (௧௧௮)

கதிரவன்முன்னிருளிருக்கு நயனமுடையொருவன்குழிக்கண்ணேவீழும், அதிகவலிச்சூரனமர்க்களக்குவெருவுவன்கிருதமறையக்காரம், இதமுளபாயசமுநிரம் பருந்தினன்கூழ்தனிற்செய்வனிச்சையென்றால், விதமிவைநான்கினுக்குங்குறையதின்ஞானிக்கிழுக்காகும்விடையஞ்சென்றால். (௧௧௯)

இங்குறைந்தபாண்டமதின்வாதனையில் வாதனைகளிருக்குமென்றல், திங்கவறிவுடையோர்கட் கின்றியமையாததொழிலொருடங்கிநிற்றல், அங்கியைத்தம்பனம்வல்லார்க்கனல்சுடாததின்வினைகளடுக்காதென்றல், தங்கும்வினைக்கேதுவாம்விடையமதில்விருப்பாதிசாராதென்றல். (௧௨0)

உணர்வுடையஞானியெவை புரிந்திடினுமிழிவிலிழிவுறாத்ததாகின், இணையிலிருதீயனெனன்பர்பூகமிலவதனான்மற்றெவைகள்செய்தும், அணைவதிருழ்வெனுமவனேதீயன்மிகஞானமதற்காகுந்தாழ்வா, னனுகினன்றேஞானமொருவனைஞானியெனப்பெயருநண்ணிநிற்றல். (௧௨௧)

கருவயிற்றையுடையதுவுங்கனவயிற்றையுடையதுவுங்கருதிப்பெண்ணின், உருவதனைக்குறிப்பதினோக் கிடிற்றே

ன்றுமுளபடியேயுலகுதன்னில், குருவையடைந்தவனருளிற்
சொரூபத்தையநுபவமாக்குறித்துளோரும், இருவையத்தி
டம்பமாய்த்தமைஞானியென்போருமேதிற்றேன்றும். ()

அருச்சுனற்குமிராமருக்குமதிகாரமவைபார்த்தேயறை
ந்தநூலின், கருத்தறியாய்ஞானமொன்றே பிரமாணஞ் சரி
தையதகனக்கன்றாகும், விருத்தமறிவாசாரமுடையோனே
ஞானியில்லோன்விருத்தனாகும், திருத்தமுடனமைச்சவிது
திணிவென்றேயுட்கொள்வாய்தீரனுகி. (கஉங)

வேறு.

என்றங்கனேகமாய்விரித்தே யிராசயோகியுரைசெய்து,
நின்றுவாக்குத்தனையடக்கிநிமிடத்தகற்றிமனத்தினையும், ஒ
ன்றுமில்லாவெறும் பாழாயொன்றாஞ் சமாதிதனையடைந்தா
ன், நின்றங்கமைச்சனிதுகண்டிங் நேர்மைபுதிதென்றதிசயித்
தான். (கஉச)

இக்தவுணர்வுநமக்கின்னமெய்தவில்லைநாமிங்கே
எந்தவுணர்வுகொடுநிற்பேமென்னவமைச்சன்யூகித்து
வந்தவழியேதான்றிரும்பிவளப்பமுடையமாபுரிக்கே [லாம்.
பந்தமுடையோருடனிருந்து பகர்ந்தானரச னியற்கையெல்

கேட்டபேர்கண்மிகவியந்துகிட்டாதென்றுமிம்முனிபோல்
தேட்டமுடனேயவரவர்கடேடிவந்துபணிந்திடவும்
வாட்டமுடனேதாய்தந்தைமனையாள்பதத்தில்வீழ்ந்திடவும்
நாட்டமாறுபாடின்றிநகைசெய்திருந்தானற்றவனே. (கஉரு)

வந்தபேர்களுடன்வார்த்தைமலராதிருப்பதவரறிந்து[ம்பித்
பந்தமுடையேநமக்கென்னைபகர்ந்தாற்றேன்று மெனத்திரு
தந்தமிடத்திற்சென்றார்கடவனுஞ்சிறிதுநாட்கழித்துத்
தொந்தமொன்றுமில்லாதசுயமாமுத்திதானானன். (கஉஎ)

வேறு.

இந்தமாராஜன்சென்றவிதிகாசந்தன்னைப்பார்ப்போர்
சிந்தனையொன்றுமின்றித்தீரவேதுறவராகி
அந்தமுமாதியில்லாவமலமேவடிவமாவர்
எந்தையருளினுண்டவெழிற்குருபரனேவாழி. (கஉஅ)

வேறு.

* அரியதுதிறவறமல்லதில்லையான்
மருவியதுறவறமொருவிமன்னனும்
உருகெழுமுடிகவித்துலகமாள்வது
பெருவிலைமணியினைப்பிண்டிக்கீதலே. (கஉக)

மஹாராஜாதுறவு-முற்றுப்பெற்றது.

சர்வஞ்சின்மயம்.

---

* அறியது-என்றும் பாடம்.

கணபதிதுணை.

### திருச்சிற்றம்பலம்.

# அத்துவிதவுண்மைமூலம்.

### பாயிரம்.

பொங்கரவதுவுமிந்தும் புரிசடையதனிற்சேர்த்தி
அங்கரன்தனிலிடத்தி லழகியமானையேந்தும்
சங்கரன்சேயெம்பாசந்தகர்த்தைந்துமொருங்கறுக்க
ஐங்கரங்கொண்டவாழத்தையனைவணக்கஞ்செய்வாம்.

ஆண்டகுருவேகண்மணியேயருளேநானென்றுகப்
பூண்டவடிவையென்னுடைய புந்தியதனுணின்றுணர்த்தி
ஈண்டப்படியேயென்னுவி லிருந்துமுணாக்கவேண்டிடுநீ
மீண்டமாலுமயன்போற்று நிமலவிருத்தநாயகியே.

பாயிரம் முற்றிற்று.

---

## நூல்.

மேலாஞ்சதுட்ட சாதனங்கண்மேவி நிறைந்தபேர்க்குரைக்கின், மேலாமதுநாமெனத்திடமாய் விளங்குமவையில்லாதவர்க்கு, மேலாம்பரமன்மான்மழுவாய் விளங்கியுரைத்தும்விளங்காது, மேலாஞ்சாதனங்கள்வர மேவவேண்டுஞ் சாதிசங்கம். (க)

உண்டாய்த்தோன்றிரமித்திடுத லொருநம்வடிவேயுருநாமம், கண்டேயிடன்மாத்திரமல்லாற் கருதிப்பார்க்கின் வேறில்லை, பண்டேமுதலித்தகைவாகும் பலவாக்காணன

மைத்திரிவால், விண்டாற்றிரிவையேகமாய் விளங்குநமது வடிவமே. (உ)

எந்தச்சத்திலசத்தாகு மிந்தவுலகுசத்தாகும்
எந்தச்சித்திலசித்தாகு மிந்தவுலகந்தாள்விளங்கும்
எந்தவின்பிற்றுன்பாகு மிந்தவுலகமின்பாகும்
அந்தச்சச்சிதானந்தமதுவே நமதுவடிவாகும். (ங)

எல்லாநாமேயெனவறிந்தா லெஃதைநினைவானினைத்திடுதல், சொல்லாமலெஃதையுரைத்திடுத லுருவிலாலெஃதைச்செய்திடுதல், நில்லாவுலகைவேறெனவே நினைதலுரைத்த லுருவிற்புரிதல், நல்லாரனைத்துநாமெனவே நாடாரவையி னுண்மையுமே. (ச)

நானுவாகத்தோன்றியிடு நாமரூபமிவையனைத்தும்
நானுவல்லவொருநாமே நாடிமகிழுஞ்சித்திரங்கள்
தானுஞ்சித்தர்காசத்திற் றன்னைத்தானேதான்றுனே
தானுங்கருவியினில்வாரந்துதானேநோக்கிமகிழ்ந்திடுதல். ()

தங்கந்தானேபணதியாய்ச் சாற்றும்விதமாய்விளங்குதலின்
அங்கமுதலாஞ்சகங்களாயறிவேவிளங்குமயலில்லை
இங்கங்கென்றேபங்கொன்று மில்லையகண்டவறிவொன்றே
துங்கவறிவுதோன்றளவுந் தோன்றுநானுவிதரூபம். (ரு)

இன்னுனன்னுனிதுவதுவென்றியம்புமுலகம்வேறன்று, தன்னுனந்தலீலையினுற்றன்னைத்தானேதன்னிடத்தில், அன்னுனின்னுனதுவிதுவென் றனந்தவிதமாய்த்தான்பகுத்தே, உன்னுநின்றுதானடிக்குமொரு கூத்தெனவேயியம்புவரால்.

தங்கமொன்றேபணதிகளிற் சாற்றும்விதங்கள்வெவ்வேறு
தங்கவிலக்கணமுமன்று தங்கம்விடவும்வேறன்று

தங்கமழியாப்பணியழியிற்சாற்றுமிந்தத்தகமைபோல்
எங்குநிறைசித்தாநம்மி லிலகுமிந்தவுலகமே. (௮)

தானுண்டாகிலுலகுண்டாந் தானுண்டாகிலுயிருண்டாம்
தானுண்டாகிற்பரமுண்டாந் தானுண்டாகில்வீடுண்டாம்
தானுண்டாகிற்பஞ்சதொழிற் றானுண்டாகுந்தனையன்றித்
தானுண்டோமற்றவையதனாற்றானேயனைத்தும்வேறில்லை.

மந்தவிருளிற்கயிற்றரவின்மாறுபாடாய்த்தோன்றுதல் போல், இந்தவுலகுமுயிர்களுமவ் வீசன்றானுமுயிரடையும், பந்தம்வீடுமீசன்செய் பஞ்சகிருத்தியங்களுமே, அந்தநமது சொரூபத்திலாரோபிதமாய்நின்றிலகும். (௧0)

அனந்தவிதமாய்க்கீற்றையுடைத் தாகுஞ்சிலையொன்றதைப்பார்க்கின், அனந்தவிதமாய்த்தோன்றியிடு மந்தக்கீற்றுஞ்சிலையொன்றே, அனந்தமுடையநம்மிடத்தி லகிலமந்தத்தகமைபோல், அனந்தவிதமாய்த்தோன்றியிடு மறிவேயன்றிவேறில்லை. (௧௧)

மையேமிகுநித்திரைமோக மயக்கிற்கனவைக் கனவதனில், பொய்யேயெனத்தோன்றாதவர்க்கேபுகலவேண்டுமென வுணர்ந்தோர், மெய்யேபோலத்தோன்றிநனி விளங்குஞ்சகஞ்சற்குருவன்றிப், பொய்யேயெனத்திட்டமதாகப் பொருந்தத்தோன்றாதொருக்காலும். (௧௨)

கனவினனவேயுணர்ந்துயர்ந்தோர்கனவென்றொருவற்குரைத்திடினும், கனவிதெனவேகாணாது காணுந்தனக்கென்றறிவுதிக்கின், வினவிலதுபோனனவையுந்தம் விகற்பமெனவேயுரைத்திடினும், நினைவினிசமாய்க்கொள்ளாதுநிசமாந் தனக்கென்றறிவுதிக்கில். (௧௩)

கனவைக்கனவென்றுணர்ந்தவனைக் கனவினீயானோனவொருவன், வினவிலவனுநனவதனில்விளங்குந்தனையேயுணாப்பனதில், நனவைநினைவென்றுணர்ந்தவனை நனவினீயானோனவொருவன், வினவிலவனுமகண்டமதாய் விளங்கும்பிரமமேயென்பன். (௧௪)

நனவிற்றானோரிடத்திருக்க நவினித்திரையின் மோகத்தால், கனவிற்றேசாந்தரமுதலாய்க் காணுமனேக விதமஃதின், வினவினுமுமகண்டமதாய் விளங்கியசையா திருந்திடவே, கனவிம்மாயைதனில்விதமாய்க் காணுந்தேசாந்தரமுதலாய். (௧௫)

கனவிற்றோன்றும்பொருளெல்லாங் கனவிற்கனவென்றுணர்ந்தக்கால், நனவில்விவகாரந்தோன்று நவிற்றுமிந்தத் தகைமைபோல், நனவிற்றோன்றுஞ்சகமனைத்து நமதுசங்கற்பம்மெனவே, நனவிற்றோன்றியிடுங்காலை நமதுசொரூபந்தோன்றியிடும். (௧௬)

மனத்திற்கனவிற்கனவெனவே மதிக்கினந்தவிவகாரத், தனத்தமுறினுங்கலக்கமுறா னதிகமுறினுமகிழ்ச்சியுறான், மனத்தினனவில்விவகார மயங்கிநீங்காதிருப்பனதின், கனத்தசகஞ்சங்கற்பமெனக் கண்டாற்றனைநீங்காதிருப்பார். (௧௭)

சிங்காதனத்தில்வீற்றிருக்குஞ்சிறப்பாரரசுங்கனவடைந்து, மங்காப்புலைத்தன்மையைமேவி வருந்துவோன்றனனவுணரின், அங்காஞ்சோகமோகமெலா மந்தக்கணமேநீங்குமதின், இங்காஞ்சீவத்துவமோக மிரியுந்தனைத்தேர்ந் தக்கணமே. (௧௮)

கனவைக்கனவென்றுணர்ந்தந்தக் கனவினனவைநோக்கிடினக், கனவையொழிந்தவக்கணமேகாணுநனவில்விழிக்

குமதின், நனவைச்சங்கற்பமென்றுணர்ந்து நனவிற்றனையே
நோக்கியிடின், நனவையொழிந்துவக்கணமேநமதுசொரூப
த்தேவிழிக்கும். (௧௯)

கனவையொழிந்துநனவதனைக் கண்டார்நனவினின்று
பிளக், கனவைநோக்கியிடின்முன்னங்கண்டபடியேதோன்
றுமதின், நனவையொழிந்துதன்சொரூபநன்றாயுணர்ந்தோர
தினின்று, நனவைநோக்கிநினைவுகொடுநாடின்முனம்போற்
றோன்றிவிடும். (௨௰)

உறக்கமோகமதிற்கனவி லுலகமுயிர்கள்விவகாரம்,
சிறக்குமெய்போற்றோன்றியதைத் தேறிற்பொய்யா விடுமஃ
தின், மறக்குமாயாமோகமதின் மாசார்பந்தம் வீடதெனப்,
பிறக்குமவைகடனைத்தேறிற் பேசும்பொய்யாய்ப் போய்விடு
மால். (௨௧)

ஒருவனுளதாகையிற் கனவுமுண்டாமுறக்க மோகமதி
ன், ஒருவனிலதாகையிற் கனவுமொருகாலையினு மிலதாகும்,
சொரூபநமதுண்டாகையினாற் றோன்றுநானாவிதசகநம், சொ
ரூபமிலதேலிலையதனாற்றோன்றுமனைத்துஞ்சொரூபமே. (௨௨)

படிகத்தடுத்தநிறங்களதிற்பத்திபாயுமந்நிறமாய்ப், படி
கமாகிநீங்கினதிற்பகருமிந்தத்தகமைபோன், முடிவினமது
சொரூபத்தின்மோகஞ்செயுமாயையிற்றோன்றும், முடிவில்
பந்தம்வீடதுமின்மொழியுமாயையென்பதுமில். (௨௩)

பழுதையதனிற்றோன்றியிடும் பாம்பையுள்ளபடிநோக்
கில், பழுதையாயேதோன்றியிடும் பாம்புமதுவாய் விடுமஃ
தின், பழுதில்சிவத்திற்றோன்றியிடும் பன்மையுலகைநோக்கி
யிடின், பழுதில்சிவமேயாய்த்தோன்றும் பன்மையுலகுமது
வாய்ப்போம். (௨௪)

தோன்றிவிளங்கும்பொருளெல்லாந் தொல்வேதாந்த விசாரணையில், ஊன்றிநோக்கியனுதினமும் யூகமதனிற் பரிசயித்தால், தோன்றிவிளங்குமறிவொன்றே சொன்மாத்திரமாய்விடுமுலகம், ஊன்றிநோக்காதவர்கட்கே யுளதுபோலத்தோன்றியிடும். (௨௫)

ஏகமாகிநின்மலமாயிருக்குநமக்கிப்பந்தமெனும், மோகம்வந்ததேதென்று முன்பின்பாரா திப்பந்தம், போகவழியேதெனநாடிப் பொருந்தும்வேத விசாரணையால், யூகமதனிற்சிதைக்கினதினுள்ளவியல்பின்றோன்றும். (௨௬)

பரவைதானேயோரலையிற் பலவாய்விளங்குமோரலையில், பரவைநீங்கியொன்றாகிப் பழையபடியே விளங்குமதின், பரவுஞ்சொரூபஞ்சங்கற்பப்பகுதியதனிற்பலவாகிப், பரவுமசங்கற்பத்தொன்றாய்ப் பழையபடியேவிளங்கியிடும். ()

கடங்கடமதிகாரணத்தைக் காட்டிடாதுமுன்விளங்கும்,படங்கடானுமப்படியேபகர்காரணமுநீங்காது, சடங்களாகுமிச்சகமுந்தான்முன்விளங்குங்காரணமாய், இடங்கொள் சொரூபத்தையுங்காட்டாதிருக்குமதைவிட்டகலாதே. (௨௮)

மரத்தைநோக்கின் மதகரியுமறைந்து விளங்குமதை நோக்கின், மரத்தைமறைத்துத்தான்விளங்கும் வாறுபோலச்சகமுழுதும், பரத்தைநோக்கினதின்மறைந்து பரமாய் விளங்குஞ்சகநோக்கில்,பரத்தைமறைத்துத்தான் விளங்கும் பரமேயனைத்துமாதலினால். (௨௯)

நாகந்துதிக்கைதனைநோக்கி நாசிகரமுந்தோன்றியிடும்
நாகநயனந்தனைநோக்கி னயனஞ்செவியுந்தோன்றியிடும்
ஏககருவிபார்த்தபடி யிரண்டுவிதமும்விளங்குமதின்
ஏகபரமும்பார்த்தபடி யிலகுமுலகுஞ்சித்ததுமாய். (௩0)

ஊனாம்போகமெமதென்றேயுன்னல்விசாரமிலாமையினால்
நீநானவைகளிவைகளெனநிலைபோல்விளங்கியிடுமிந்த
நானாவிதமாஞ்சகமுழுது நாமேயன்றிவேறில்லைத்
தானாய்நோக்கிற்றானுஞ்சகமாய் நோக்கிற்சகமாகும். ()

மாயையெனுமிவ்வுரைக்கருத்த மதிக்கின்யாதொன்றிலாததுவே, மாயையெனவிப்படியிருக்கமதிப்பரதனையிருவகையாய், மாயைமெய்யென்றுரைத்திடுவர் மயக்கப்பட்டுத் தனைமறந்தோர், மாயைபொய்யென்றுரைத்திடுவர் மயக்க நீங்கித்தனையறிந்தோர். (௩௨)

நாமரூபந்தனைநோக்கி நாடன்மனமும்புறமுகமும்
நாமரூபந்தனைநீக்கி நாடலறிவுமுண்முகமும்
நாமரூபத்தெவ்வளவு நாட்டஞ்சொரூபந்தோன்றாது
நாமரூபநாட்டம்விடினமது சொரூபந்தோன்றியிடும். (௩௩)

அரையகுமாரன்புலையருட னணுகிமறந்துமொருவரால், அரையகுமாரனெனவறியி லஃதெப்போது *மறவாதின், தரையிலாசானெழுந்தருளித் தனைப்பார்த்தது நீயெனவுரைக்கின், புரையிலதுவாமூவவத்தை பொருந்தும்பொழுதுமறவானால். (௩௪)

படியிற்பொருளின்மெய்யொன்று படிறென்றிந்தவிருவகையும், முடிவின்மெய்பொய்யறிந்திடலா மொழியுமிந்தத் தகைமைபோல், கொடியவுலகைமெய்யெனவே கூறுமதையுமறிந்திடலாம், முடிவிற்சகம்பொய்யேயாகு முத்தியொன்றேமெய்யாகும். (௩௫)

அகிலந்தோன்றுபொழுதுமறைந் ததிட்டானமதாய்விளங்கியிடும், அகிலநீங்கிற்றான்விளங்குமந்தச்சச்சிதானந்தம், அகிலந்தோன்றுபொழுதுமறைந்தது தோன்றுதல்போலது

* மறந்திலன்போல்-என்றும்பாடம்.

தோன்றில், அகிலந்தோன்றாததனின்மறைந் ததனாலகிலம சத்தாமே. (௩௯)

முத்தியாதோவெனவெண்ணிமுயங்கவேண்டாமிஃதறுதி, முத்தியுளதேற்பந்தமுண்டாமுத்தியொருகாலையுமில்லை, முத்திதானுஞ்சகம்வேறின் மோகமதிற்காண் பதைப்போக்கின், முத்தியாகுமிந்நிலையை முயன்றுவருந்தி நிலைகொள்வாய். (௩௭)

இல்லாமாயைதங்கணிலை யாருநிற்கவம்மம்ம, பொல்லாப்பிறப்பிற்பட்டதுமாய்ப் போக்கமிகவுந்தவிர்த்ததுமாய், நல்லாரிணக்சஞ்சேர்ந்ததுமாய்ஞான விசாரமுதித்ததுமாய், எல்லாமாம்வீ டடைந்ததிமா யார்க்குங்காட்டி மறைந்திடுமே. (௨அ)

எல்லாநீங்கிச்சற்குருவை யெங்குந்தேடியடைந்தருளி, நல்லாருணருஞானநூ னவின்றுவிசாரஞ் செய்வதுவும், பொல்லாமனத்தை யொடுக்கிநிட்டை பொருந்தி நோக்கல்லா நோக்கும், இல்லாமாயைதனைத்துணிவா யில்லையெனவேகாண்குதற்கே. (௩௯)

விளங்குஞ்சகங்களனைத்தினிலும்விளங்குநாமாதிகணீங்க
விளங்குமதைமாத்திரநோக்கில்விளங்கும்பிரமமக்கணமே
விளங்குநாமாதிகளுமதாய் விளங்கும்வேறாய்விளங்காது
விளங்குமிந்தநிலையெவர்க்கும் விளங்குமவிரோதமதாயே. ()

நாமரூபம்விளக்கல்பரம் நாடலுயிராமவைமாயை
நாமரூபந்தனைநோக்கி நாடச்செய்தலஞ்ஞானம்
நாமரூபத்திவ்வளவுநாட்டமெனவேசெய்தல்வினை
நாமரூபந்தனைநோக்கிநாடுமிடத்திலிவைநிகழும். (சக)

உருவநாமநோக்கிடத்திலுளதாமிந்தவைவகையும்
உருவநாமநீக்கிடத்திலொன்றுமிவைகளிலவாகிச்
சொரூபமொன்றேநிகழ்தலினுற்சொன்னவிவைகளைவகையும்
சொரூபமன்றிவேறில்லைதோன்றும்விவகாரத்தசையில்.(௪௨)

விவகாரத்திற் பகுப்புகளாய் விரியும்பரமார்த்தம் மதனில், சிவகாரமதாய்விளங்கியிடுஞ் சிவமேயனைத்து மாதலினுல், பவகாரியத்தை யுடையோர்க்குப் பகுப்பேயென்றுந் தோன்றியிடும், பவகாரியத்தை * யொழிந்தோர்க்குப் பகுப்பொன்றின்றிச்சிவந்தோன்றும். (௪௩)

பந்தத்தசையிற்பலவென்றும் பரமார்த்தத்தி லொன்றென்றும், இந்தச்சடங்குசொரூபத்தி லென்றுமில்லைநோக்கியிடின், எந்தக்காலு மொருபடித்தா யிலங்குஞ்சொரூபமிவைமாயா, தொந்தமதனிற்ருேன்றியிடுஞ் சொரூபத்தாரோபிதமாகும். (௪௪)

மித்தியவாதிவேதாந்தி விளங்குஞ்சைவசித்தாந்தி
சத்தியவாதியிருவர்களுஞ் சாற்றுந்தங்கட்கடுக்காதை
மித்தியவாதிசகத்தினுக்கு விளம்புஞ்சிருட்டிமுடிவினின்றும்
சத்தியவாதிசிவமொழிந்து சற்றும்வேறில்லெனவுரைக்கும்.
சகமதென்பதிலையெங்குந் தானேநின்றுவிளங்கியிடும்
சகமதெனவேதோன்றிடுதல் தமதிசங்கற்பம்மதனில்
அகமதனிலேகண்டுணராதவையிற்சிக்கிப்பந்தமுறும்
அகமதனிலேகண்டகற்றி லப்போபண்டைப்படிநிகழும். ()
பந்தமின்றிவீடின்றிப்பரமேயெங்கும்விளங்கிடவும்
பந்தம்வீடென்றெனவுரைத்தல் பார்க்கின்மாயாமோகமதில்
சிந்தைவிரிவேபந்தமதாஞ் சிந்தையொடுக்கமேவீடாம்
இந்தவகையாம்பந்தம்வீ டியம்புமபவாதமதாகும். (௪௭)

* ஒழித்தோர்க்கு-என்றும்பாடம்.

தோன்றிநிகழு முலகெல்லாஞ் சொரூபமே மற்றுருநாமம், தோன்றிநிகழ்தன்மாயையே *சொரூபம்விடவும்வேறன்று, தோன்றிநிகழுமுருநாமஞ் சொரூபம்விடவேறெனவுன்னித், தோன்றிநிகழ்தல்பந்தமதாஞ் சொரூபமெனவே யுனல்வீடாம். (சஅ)

உருவநாமமவைக்கிருப்பு முதிப்புஞ்சொரூபத்தினையன்றி
உருவநாமமவைதனக்கே யொருகாலையினுமிலதாகும்
உருவநாமமவைநோக்க லொருவிநமையேநோக்கியிடின்
உருவநாமநிகழ்ந்திடா தொருநம்வடிவாயேநிகழும். (சகூ)

பந்தமென்றும்வீடென்றும் பயிலுநினைவேபந்தமதாம்
பந்தமெங்காம்வீடெங்காம் பரத்தைவிடவேறிலாமையினால்
தந்தஞ்சங்கற்பந்தனிலே தாமேமோகித்திடுமுயிர்கள்
தந்தமசங்கற்பந்தனிலே தாமேநீங்கியிடுமோகம். (ரு0)

உருவநாமந்தனைநோக்கி லொருதன்னிலையைநீங்கினதாம்
உருவநாமந்தனைநீக்கி லொருதன்னிலையேநின்றதுவாம்
உருவநாமமவையிரண்டு மொருதன்வடிவேயெனக்காணில்
உருவநாமந்தானேயா யொளிருமதுவேமுத்தியுமாம். (ருக)

கொள்ளுநெறியேதேதுபந்தங் கூடும்வீடேதெனவேண்டா
உள்ளும்புறம்புமெனுமிவையி லுதவுமெஃதிதனக்கதனின்
றெள்ளுஞ்சங்கற்பங்களெல்லா மிரியநோக்கிநின்றதன்னை
உள்ளும்புறம்புமின்றியெங்கு மொளியாய்க்காணலாகியிடும்.

ஒளியேயெங்கும்விளங்கிடுமவ் வொளியில்விளங்கு முலகெல்லாம், ஒளியேயன்றிவேறுமோ வொளியையறியா ருலகென்பர், ஒளியேயன்றியுலகுதனக் கொருகாரணமு மிலைய

---

* சொருபம்-என்றும் பாடம்.

தனால், ஒளியேயனைத்துந் திரைநுரைக ளுவரியலது வேறாமோ. (௫௫)

மாயைவேறென்றெனவுன்னி மதிக்கவேண்டாம்பேதமதி
மாயையாகுமற்றஃதை வருந்திமுயன்றுபேர்த்திடுக
மாயைநீங்குமிந்தமதிவந்தவழியேதெனவேண்டாம்
மாயைநெறியிலம்மதியை வதைக்கிலதுவந்ததுதோன்றும்.

விளங்கியிடுமிவ்வுலகெல்லா மித்தைவடிவேயென்பதுவும்
விளங்கியெங்குந்தற்சொரூபம் விமலவடிவேயென்பதுவும்
விளங்கிலருத்தமொன்றேயாம் வேறாய்க்காணுமஃதகற்றி
விளங்குமொளியாயேகாண்கில்விளங்குமருத்தமொன்றாயே.

தனதிசங்கற்பந்தனிலே சகங்களாகிவிளங்கியிடும்
தனதசங்கற்பந்தனிலே சகம்போயொடுங்குமதனாலே
தனதுவடிவேசகங்களெல்லாந் தன்னைவிடவேறிலைத்தங்கம்
தனதுவடிவைவிடப்பணிகடான்வேறாகிவிளங்கிடுமோ. (௫௬)

நிலைமைநீங்கிற்சகமுதித்து நிசமுமாகுமற்றவையின்
நிலைமைஞானவிசாரணையி னிசம்போயொடுங்குந்தோற்றரவு
நிலைமையாகுந்தனைநோக்கி னீங்குமறையுமிச்சகத்தின்
நிலைமையொருவேதுவினுதிக்குநீங்குமிருமையேதுவினில். ( )

எல்லாநாமெப்படியாவோ மென்னவேண்டாமிலக்கணம்பார்த், தெல்லாநோக்கி யிடுமிடத்தி லிருப்புந்தோற்றரவுமின்பும், எல்லாவிடத்துமுண்டாகு மியல்புமவையே பிறித்திட்டால், எல்லாமெங்கே தோன்றிடுமோ விதனாலெல்லாநாமாகும். (௫௮)

வெள்ளிவிகற்பமதிற்கிளிஞ்சில் விளங்கும்விகற்பந்தனை நீக்கித், தள்ளின்வெள்ளி யென்பதுபோய்த் தானேவிளங்கு

மக்கிளிஞ்சில், வெள்ளியென்றபொழுதமல விகற்பம்மென்
றபொழுதமது, வெள்ளியாகிநீங்கினதில்விமலத்ததுபோன்
மாயையுமே. (௫௯)

ஒன்றேயென்னின்முத்தியில்லை யொருவன்வேறே யுண்
டென்னில், ஒன்றேயாகமாட்டா மற்றொன்றுமென்னிலொன்
றுகெடும், ஒன்றேயென்றவாதிகட்கு மோதுமிரண்டேயென்
றவர்க்கும், ஒன்றேயிரண்டுமா மொன்றேயுண்மைகற்பிதம்
மிரண்டே. (௬௦)

விகற்பமிலதுமுதற்றோன்றி விளங்கும்விமல மதினின்
றும், விகற்பமதனிற்சகந்தோன்றும் விண்ணிற்பீலிதோன்று
தல்போல், விகற்பமதிற்றோன்றுவதொழிந்து வேறில்லென
வேவிடுத்ததனை, விகற்பமின்றியேநோக்கின் விளங்கும்விமல
ந்தானாயே. (௬௧)

இந்தவிடையமவையில்வருமின்பும்பேரின்பத்திருந்தே,
வந்தலேசமிட்டமது வந்துகிடைத்த வக்கணமே, அந்தமுக
மாய்மதிதிரும்பியறிவானந்தங்கணம்புசிக்கும், அந்தமுகமே
யெக்காலுமாகினனைத்துமடைந்ததுவாம். (௬௨)

விருத்தியொன்றுமில்லாமல் விளங்குநிலையேநாமதனில்
விருத்திதோன்றின்முன்பினின்றிவிளங்குஞ்சகசீவபரங்கள்
விருத்திநீங்கின்முப்பொருளும் விளங்கிடாமற்றதனாலே
விருத்திதானேபந்தமதாம்விருத்தியொழிவேவீடாகும். (௬௩

நிருவிகற்பநமதிடத்தி னின்றுவிகற்பமுதித்தளவில்
ஒருமுப்பொருளுமுதித்துவிடுமொருங்கேமூலவிகற்பமதை
ஒருவிநமதுநிலைதோன்றுமொருமுப்பொருளுமதுவாகும்
குருவினருளினிந்நிலையைக் கூடவேண்டுநெறிநின்றே. (௬௪)

ஏகபரத்திற்றோன்றுலகி லெங்கும்விடையமாதல்பரம்
ஏகவிடையமாதலுயிரிந்தவுயிர்க்கேமுத்தியினி,
ஏகவிடையமுதற்றள்ளி யெங்குமாகும்விடையமதும்
ஏகத்தள்ளிமற்றுலகு மிறக்கிற்பண்டைப்படிநிகழும். (௬௫)

எங்கும்விடையமாம்பரத்துக் கிருளெக்காலுமிலையாகும்
தங்குமுயிர்க்கேமறதியுண்டாந் தன்னாற்றளவேகூடிடா
எங்கும்விடையமாம்பரமே யேகவிடையவுயிர்போலத் [ம்.
தங்கிக்குருவாயெழுந்தருளித்தள்ளுமுயிர்கண்மறதியெலா

மாயைபதனில்மும்முதலும்வகுப்பாய்விளங்கியிடுமந்த, மாயைநீங்கியொருமுதலாய் வகுப்பொன்றின்றி விளங்கியிடும், ஆயபிரமமென்றுளதோ வன்றேயில்லாமாயையுமுண்,டாயபிரமமுள்ளளவு மந்தமாயைக்கழிவில்லை. (௬௭)

இந்தமாயைக்கழிவிலதேனிந்தவுயிர்கட் கொருகாலும், அந்தமுத்தியிலையென்னி லறையுமுயிர்கடமைமறந்த, பந்தநீங்கினக்கணமேபரமாய்விளங்குமதையன்றி, இந்தவில்லா மாயைக்கழிவிலதினிலைவீடெனக்கூடா. (௬௮)

தன்னைமறைத்தபந்தமதைத் தள்ளிநீங்கிற்றான்விளங்கும், தன்னைமறந்ததேபந்தந் தன்னையறிந்ததேமுத்தி, தன்னைவிடவோர் பொருளில்லைத் தானேபிரம மாயையும்பின், தன்னைவிடவேறாய்விளங்காதானேயாகிவிளங்கியிடும். (௬௯)

தன்னையறியாவியற்கையினிற் சத்தேபோலவிளங்கியிடும், தன்னையறிந்தவுடனசத்தாய்த் தானேவிளங்குமிவ்வுலகம், தன்னையறியுமளவுமிவை தன்னைவிடவேறிலையெனவே, தன்னைநோக்கியிடினவையுந் தானாய்விளங்குமுடிவதனில். ()

இல்லாமாயைதானிருந்தென் னிறந்தென்னவைபந்தம
தாகா, இல்லாமாயைதனைமெய்யா யெண்ணுமதியேபந்தம
தாம், இல்லாமாயைதனைப்பொய்யா யெண்ணுமதியேமுத்
தியதாம், 'இல்லாமாயையில்லையென்றேயியல்பாய்த்தோன்
றுந்தன்னிலையில். (௭௧)

நினைவேமூலமற்றதனி னின்றுவிரியுமும்முதலும், நினை
வேநீங்கிலவைமூன்றுநினைவிலொடுங்குமதனாலே, நினைவே
பந்தநினைவொழியினிலைமையானமுத்தியுமாம், நினைவேநீங்
கியனுதினமுநின்றநிலையேநின்றிடுக. (௭௨)

நினைவுநீங்கிலுருநாம நீங்குமவையைத்தள்ளிடினும்
நினைவுநீங்குமற்றவையி னினக்கேதிச்சையதின்று
நினைவுநீங்கிநின்றிடமேநிலைமையானமுத்தியென்றும்
நினைவுகொண்டந்நிலையைவிட்டுநீங்காதென்றுநின்றிடுக. ()

நினைவைநீக்கிநோக்கியிடினிமலசொரூபந்தோன்றியிடும்
நினைவைமேவிநோக்கியிடி னிலையிலுலகந்தோன்றியிடும்
நினைவிலுலகமறிந்ததுவு நீங்கிச்சொரூபமறிந்ததுவும்
நினைவினோக்கிற்றானில்லைநிகழுமாயாமோகமதில். (௭௪)

தனதுநிலையிற்றானிற்கச்சாற்றுமாயாமோகமதில், தன
துவடிவைமறந்துயிர்போற் றங்கிநீங்கிற்றானிகழும், தனது
வடிவுதோன்றளவுஞ்சத்தேபோலவிளங்கியிடும், தனதுவடி
வுதோன்றளவிற்றானேயசத்தாய்விளங்கியிடும். (௭௫)

கானனீருங்கயிற்றரவுங்கட்டையதனிற்கள்வனுமே, ஆ
னவவைதம்மதிட்டான மாகுமவைகடோன்றளவும், ஆனத
வைமெய்போற்றோன்றுமதுபோற்சகமுமதிட்டானம், ஆன
சோரூபந்தோன்றளவுமசத்தல்லாதுபோல்விளங்கும். (௭௬)

அதிட்டானமதுதோன்றளவு மதுமெய்போலவிளங்கியிடும், அதிட்டானமதுதோன்றியபின் னசத்தேயாகிவிளங்கியிடும், அதிட்டானமதுதோன்றளவு மசத்தென்றெணியே நோக்ககற்றி, அதிட்டானமதாந்தனைநோக்கி லசத்தேயாகி விளங்கியிடும். (௭௭)

தன்னைச்சீவனெனத்திரிவாய்த்தானின்றுணர்தலஞ்ஞானம், தன்னைப்பிரமமெனத்துணிவாய்த் தானின்றுணர்தலே ஞானம், முன்னைத்தொடர்ச்சிவிடையமது மூலவரவும்வாதனையும், பின்னையொருங்கேயொழிந்துவிடும்பேணல்விடுதலவைவேண்டா. (௭௮)

நிமலநெஞ்சையுடையோர்க்கு நிலத்திலாசானெழுந்தருளி, விமலதத்துவமசியெனவேவிளம்பிலவனுக்கக்கணமே, முமலநீங்கிச்சிவம்விளங்கு மோகநெஞ்சை யுடையோர்க்கு, முமலச்சார்வாம்வாதனையேமூடிமிகவுநிறைந்திடுமே. (௭௯)

எங்கேநிறுத்தினங்கிருக்குமியல்பையுடையநெஞ்சுடையோர்க், இங்கோர்மயக்கங்களுமில்லையிச்சையிறந்த நிலையாகின், அங்கேயாசானெழுந்தருளியதுநீயெனவேயுரைத்தவுடன், அங்கேசொரூபநாமெனவே யறுதியாகத் தோன்றியிடும். (௮௦)

ஒருவவேண்டுமனைத்துமென வுன்னவேண்டாவினைநீங்கில், ஒருவுமனைத்தும்வினையுளதே லொன்றிமேவுமற்றவையை, ஒருவல்பற்றலவையைவிடுத் துள்ளபடியே முடியுமெனச், சொரூபநாமேயெனத்திடமாய்த்தோற்றுமதற்கேமுயன்றிடுக. (௮௧)

சொரூபநாமேயெனத்திடமாய்த் திணிந்தபேர்களில்லறத்தை, மருவிநீங்காதிருந்திடினு மற்றோர்குறையுமவர்க்

கில்லை, சொரூபநாமே யெனத்திடமாய்த் துணியாதவர்களில்லறத்தை, ஒருவிநீங்கினதுகொண்டே யுளதோமுத்திபவமறுமோ. (௮௨)

மருவியில்லினிருந்தவர்க்கு மருவுஞ்சோக மோகமென்றும், ஒருவித்துறவையடைந்தவர்கட் கொருவுமென்றுங் கூடாது, சொரூபநாமென் றறியார்க்குச் சோகமோக மற்றுவிடா, சொரூபநாமென் றறிந்தவர்க்கே சோகமோக மற்றுவிடும். (௮௩)

மித்தையதனைப் பற்றிடவும் விடவும்வேண்டா விவ்வுலகை, மித்தையெனக் காண்குதல்போதும் விட்டுநீங்கு முடனெருங்கே, எத்தைவிடுதலெதைப்பற்ற லென்னிற்சீவத்துவமான, அத்தைவிடுதல்தனைநோக்கு மதைப்பற்றிடுதல்நெறியாகும். (௮௪)

இல்லமென்றுந் துறவென்று மெண்ணவேண்டா மற்றவையில், அல்லனீங்கி யொருநினைவா யசைவற்றிருந்து சொரூபமதைச், செல்லவிடையூ றின்றியதைச் சேர்ந்தேநின்றுதன்னிலையைப், புல்லவிடையூ றுகுமதைப் போக்கிவிடுக வேதானும். (௮௫)

விளக்குஞ்சொரூபநோக்காது விளங்குமுலகை நோக்கியிடின், விளக்குஞ்சொரூபந்தோன்றாது விளங்குமுலகேதோன்றியிடும், விளக்குஞ்சொரூபந்தனைநோக்கி விளங்குமுலகை நோக்கமறில், விளக்குஞ்சொரூபமேதோன்றும் விளங்குமுலகுமதுவாய்ப்போம். (௮௬)

தன்னைமறைத்தபந்தமதைத் தள்ளிநீக்கித் தனையறியில், தன்னைவிடவோர் பொருளுமின்றித் தானேதானாய்விளங்கியிடும், தன்னையறியுமவ்வளவுந் தன்னைவிடவேறிலையென்றே,

தன்னைநோக்கி யொருநினைவாய்ச் சாதித்திடவே மிகவேண்டும். (அஎ)

மூலவக்கரம்மதனின்மூன்றக்கரமுநின்றதுபோல்
நீலவுற்பலம்மதனி னிறமுன்மூன்றுநின்றதுபோல்
சீலமதனினேக்கியிடிற் சீவன்பரமச்சகமூன்று
கோலமவையுஞ்சொரூபமதாய்க் கூடிநிகழுமொன்றுயே. ()

எல்லாமாகுந்தற்சொரூப மிருக்குமளவுமாயையுமுண்
டில்லாமாயையுள்ளளவு மீசன்புரியும்பஞ்சதொழில்
இல்லாதொழிந்துபோவதில்லை யிதனுற்சீவபரமுண்டு [ம்.
சொல்லாநின்றவிவர்க்குக்கரி சொரூபந்தானேபகுத்துநிற்கு

பகுத்துநின்றதற்சொரூபம் பரசீவருக்குச்சாட்சியதாய்ப், பகுத்துநிற்குஞ் சாட்சியையே பார்த்துத்தத்துவமசியென்று,வகுத்துமாவாக்கியங்கூறுமற்றிச்சீவன்றனையல்ல,தொகுத்துக்கேட்ட திவனெனினுஞ் சொன்னதிவன் சாட்சியைப் பார்த்தே. (௧௦)

இந்தச்சீவன்கற்பிதமே யின்றிவேறோர்பொருளென்னில்
அந்தச்சொரூபமிவனுகா னந்தச்சீவனென்றுகும்
இந்தச்சீவனதுநாமென் றெண்ணிச்சோகம்பாவிக்க
அந்தச்சொரூபமாய்விடுவ னவனைவிடவேறிவனிலதின். (௧௧)

இதனுற்பந்தமுத்தியுமுண் டிதனுற்பந்தமுத்தியுமின்
றிதனுன்முத்திபெற்றவனுண் டிதனுன்முத்திபெற்றவனின்
றிதனுற்பலவேயாகியிடு மிதனுலொன்றேயாகுமென
இதனுலவிரோதமதாகுமிதுவேநமதுசித்தாந்தம். (௧௨)

இந்தநெறியிலனுதினமு மேகாந்தத்திலொருநினைவாய்ப், பந்தமுத்திமார்க்கமதைப்பகுத்துவந்தவழிப்படியே,தொ

ந்தமகற்றிப்பழையபடி சொருபமதனி னின்றிடென, இந்தவ
கையேயருள்புரிந்தாளெனையாள்விருத்தவம்பிகையும். (கூங)

கோர்த்துப்பத்துத்திசைகளினுங் குலவும்பதினுலுலகத்
தும், பார்த்துநோக்குமிடமெல்லாம் பரமேநிற்கயானவமா
ய்க், கூர்த்துநோக்கிப்பாராது கொடுமைகளிலே நாட்கழித்
தேன், ஈர்த்துவிருத்தவம்பிகைநின் றிந்தோவென்றுள்யான்
கண்டேன். (கூச)

கொக்குமிளாதேருதலினருட் குருவினருளிலியானேக்
கத், திக்குலோகமென்றதெல்லாந் தெரியவேண்டியுளைத்த
துவாய்த், திக்குலோகமும்மிறந்து தேருமியானு மிறந்தது
வாய், ஒக்குமுவமையில்லாத வொளியாயெங்கு நிறைந்த
துவே. (கூரு)

அந்தோவந்தோவாளாவிவ்வநுபூதியினையறியாது,வெந்
தோர்மயக்கிலகப்பட்டு வீணினளைக்கழித்துவிட்டேன், இந்
தோபாவொன்றருட்சத்தி யெனக்குங்காட்ட யான்கண்ட, சந்
தோடத்தைச்சொலப்படுமோதானேதானின்றறிவதுவே. ( )

எந்தனுடையசரித்திரங்களெனக்கே நகைவந்திடுநினைக்
கில், இந்தக்குறைகள்பாராம லெனையும்வலிதிற்பிடித்திழுத்
து, பந்தமுத்திவிவகாரம்பறித்தேயெறிந்துபழையபடி, அந்த
வெனதுநிலையில்வைத்தவன்னைக்கெனையோகைம்மாறே. ( )

எனதுவடிவையறியாமலிந்தவுயிராய்நின்றதுவும், மன
துமிகவும்வாடினதும் வழிகாணுமலேங்கினதும், தனதுகணி
ற்றேன்றிடு நெருப்பிற் றருவேவதுபோல் வெந்ததுவும், தன
துகடைக்கண் ணுலொழித்த தாய்க்குமெனையோ கைம்
மாறே. (கூஅ)

என்னையறியாதிருவனையு மேங்கியுழன்று கிடப்பேற்குத், தன்னைநிகராம்விருத்தகிரி தங்குமுமையே தயவாகிப், பின்னையானுந் தானுமொன்றும் பிரமந்தனையே யறிவித்து, முன்னைமயக்கந்தனைக்கெடுத்த முதல்விக்கெனையோ கைம்மாறே. (௯௯)

எழிலார்விருத்தாசலவடிவா மெந்தைவாழ்கவெனையாளும், எழிலார்விருத்த வம்பிகையுமென்றும் வாழ்கவெனக்கருளும், எழிலார்பிரணவமும்வாழ்க வெந்தாயருளைநோக்கியிடும், எழிலாரடியார்களும் வாழ்கவெனைப்போ லெல்லோர்களும்வாழ்க. (௧௦௦)

வேறு.

ஏரூரும்விருத்தகிரிக்குமாரதே வெனுமுனிவ னிசைக்குநாவாய்க், காரூரும்பழமலையிற் பெரியநாயகியிருந்தே கழறுமிந்தச், சீரூரும்மத்துவிதவுண்மையநுபவ முணர்ந்தோர்திகழ்வாரொன்றும், தேரூருஞ்சிவனுணை முத்திபெறலுண்மையிதுதிண்ணந்தானே. (௧௦௧)

அத்துவிதவுண்மை-முற்றுப்பெற்றது.

சர்வஞ்சின்மயம்.